உடைந்த உள்ளங்களுக்கு

# இயேசுவின் சமாதானம்

வருடம் 16 மாதம் 7



## இயேசு
## உங்களை
## சந்தோஷப்படுத்துவார்

ஜனவரி 2017



உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் (யோவான் 16:20). நீங்கள் எந்த காரியத்தைக் குறித்து துக்கத்தில் இருந்தாலும் கலங்காதிருங்கள், கவலைப்படாதிருங்கள். ராஜாதி ராஜா இயேசு இந்த புத்தாண்டில் உங்களை சந்தோஷப்படுத்தப் போகிறார்.

# இயேசு உங்களை சந்தோஷப்படுத்துவார்

- ஏ.எஸ்.வி. ராபின்

## உங்களுக்கு வெற்றி

கர்த்தர் இயேசு கூறுகிறார், உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் (யோவான் 16:33) உலகத்தில் பிறந்த ஒவ்வொருக்கும் ஏதோ ஒரு வகையான உபத்திரவம், பிரச்சனை இருக்கும். இப்படிப்பட்ட நேரங்களில் நாம் இயேசுவை உறுதியாய் பிடித்துக் கொள்ள வேண்டும். எந்த ஒரு பிரச்சனைக்கும் முடிவு கட்ட நம் இயேசுவால் முடியும். ஏனென்றால் அவர் சர்வ வல்ல தேவன். வியாதி, வறுமை கடன் தொல்லை, கோர்ட், கேஸ், வேலை இல்லாத் திண்டாட்டம், திருமண தடைகள், குழந்தையின்மை, நிம்மதி இழந்த நிலை உறக்கமில்லாத நிலை, குடும்பத்தில் சண்டை, பிரிவினை, மரணபயம் இப்படிப்பட்ட பாடுகளை கர்த்தர் இயேசுவின் உதவியோடு நாம் ஜெயிக்க முடியும். இதற்கு நம் வாழ்வு தேவனுக்கு பிரியமாய் இருக்க வேண்டும். நமக்கு எப்படிப்பட்ட பயங்கரமான போராட்டமாய் இருந்தாலும், தேவன் இயேசு எல்லாவற்றையும் உடைத்தெறிவார். அது மட்டுமல்ல பாதிக்கப்பட்டவர்களை விடுவித்து, சந்தோஷமாய் வாழ வைப்பார். ஏனென்றால் இயேசுதான், மனித ரூபத்தில் இவ்வுலகத்தில் வெளிப்பட்ட இறைவன் (1தீமோத்தேயு 3:16) நம் பாவங்களையும், அக்கிரமங்களையும் அவரிடம் சொல்லி கண்ணீரோடு ஜெபம் செய்து, அதை விட்டுவிடுவோம். அப்பொழுது பாவமன்னிப்பு தந்து, நமக்கு எல்லாவற்றிலும் இயேசு வெற்றித் தருவார்.

## உங்களுக்கு சந்தோஷம்

ஸ்திரீயானவளுக்கு பிரசவ காலம் வந்திருக்கும் போது அவள் துக்கம் அடைகிறாள். பிள்ளை பெற்ற உடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தான் என்ற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினைக்கமாட்டாள் (யோவான் 16:21 ). கர்ப்பம் தரித்த ஒரு பெண்ணுக்கு, வாந்தி, தலைசுற்றல், இரவு உறக்கமின்மை, உடல் பலவீனம், ரத்தசோகை, வயிற்றுவலி போன்ற உபத்திரவங்கள் இருக்கும். பாரமான வேலைகளை செய்ய முடியாது. அவர்களால் பிரசவ வேதனையை தாங்க முடிவதில்லை. ஆனால் குழந்தை பிறந்ததும், தேவ கிருபையால் எல்லா கவலையும், வலியும் மறைந்து விடும். குழந்தையை பார்த்து, பார்த்து மகிழுவார்கள். இது போலவே நம் வாழ்வில் பல உபத்திரவங்கள், பிரச்சனைகள், நமக்கு பிரசவ வேதனை போலவே தோன்றும். ஏற்ற வேளையில், அந்த காரியத்தில் நம் தேவனாகிய கர்த்தர் நமக்கு விடுதலை தரும்போது, அதில் வெற்றி தரும்போது, தேவன் அற்புதத்தை செய்யும் போது, உபத்திரவத்தை மறந்து சந்தோஷப்படுகிறோம். இந்த சந்தோஷத்தை நமக்கு தருபவர், நம் தேவாதி தேவன் இயேசு. திரியேக தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

## அற்புதம் செய்பவர்

கோவையில் சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம் இது திருமணமாகாத ஒரு வாலிப மகன் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, அநேக நாட்கள் மருத்துவமனையில் இருந்தான். உடல் பெலவீனப்பட்டு மயக்க நிலையில் இருந்தான். அவனுடைய ரத்தத்தில் 40 ஆயிரம் ப்ளேட்லட்ஸ் மட்டுமே இருந்தன. குறிப்பிட்ட மணி நேரத்திற்குள் ப்ளேட்லட்ஸ் பெருகாவிட்டால் அவனுடைய உயிருக்கு ஆபத்து என்று மருத்துவர்கள் கூறி விட்டனர். அப்பொழுது அவன் தாயார் என்னை ஜெபிக்க வரும்படி அழைத்தார். அவனுக்காக இயேசுவின் பெயரால் பிசாசின் கட்டுக்களையும், வியாதி கட்டுக்களையும், உடைத்து பாரத்தோடு ஜெபித்தேன். நான் வீடு திரும்பியதும், டாக்டர் பரிசோதனை செய்த போது ரத்தத்தில் ப்ளேட்லட்ஸ் 1இலட்சத்து20ஆயிரமாக கூடி உயிர் பிழைத்தான். இயேசு அவர்கள் துக்கத்தை சந்தோஷமாய் மாற்றினார். இது தேவன் இயேசு செய்த மிகப்பெரிய அற்புதம். பின்பு திருமணம் முடித்து, கணவன், மனைவி இருவருமே ஆஸ்திரேலியாவில் சென்று சாப்ட்வேர் எஞ்ஜீனியராக பணிபுரிகிறார்கள். ஆகவே நாம் தேவனை மட்டுமே சார்ந்து வாழ்வோம். இயேசுவின் உள்ளத்தை சந்தோஷப்படுத்துவோம். அவர் நம் துக்கங்களை மாற்றி பரலோக சந்தோஷத்தை இந்த பூமியிலும் நமக்கு கொடுப்பார். முடிவில் பரலோகத்தில் நித்திய வாழ்வை இயேசுவோடு இணைந்து வாழும்படி கிருபை செய்வார்.







பெண்கள் பகுதி

# தாய் பறவை

-பொற்செல்வி ராபின்



பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருக்கே மகிமை!

என் பாசத்திற்குரிய சகோதரியே, இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரால் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன். தேவன் உங்ளையும், உங்கள் குடும்பத்தினரையும் ஆசீர்வதிப்பாராக!

## சிறகுகளால் மூடுவார்

அவர் (தேவன்) தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய் என்று சங். 91:3ம் வசனம் கூறுகிறது. வீட்டில் வளர்க்கப்படும் கோழி தன் குஞ்சுகளை கூட்டிக் கொண்டு, இரைதேடி அலையும், திடீரென்று பருந்து எங்கிருந்தோ பறந்து வரும். அது இறங்கிக் கொண்டிருப்பதை தாய்க்கோழி உடனே கண்டு உஷார் ஆகிவிடும். அது உயரே பறந்து பறந்து, அந்த பருந்தை எதிர்த்து போராடும். பருந்து தோற்றுப் போய் பறந்து விடும். தன் குஞ்சுகளை காப்பாற்றும் தாய்ப்பறவை போலத்தான் நம்மை உருவாக்கிய தேவனும், நம்மை காப்பாற்றுகிறார். பருந்து பறந்ததும் குஞ்சுகள் பயந்து தன் தாய்க்கோழியின் சிறகுகளின் கீழே அடைக்கலம் கொள்ளும். தாய்க்கோழி தன் சிறகுகளை நன்றாக விரித்து, குஞ்சுகளை அன்போடு மூடிக்கொள்ளும். இது போல இயேசுவும் நம்மை அரவணைத்து அடைக்கலம் தருகிறார்.

## இயேசுவின் விலைக்கிரயம்

நம் தேவன் இயேசு, சிலுவையில் நமக்காக தன் ரத்தத்தை சிந்திக்கொடுத்து, நம்மை பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும்,நோயிலிருந்தும், பிசாசுப் பிடியிலிருந்தும், பில்லி சூன்ய செய்வினைக் கட்டுகளிலிருந்தும் மந்திரக்கட்டுகளிலிருந்தும், மரணத்தின் பிடியிலிருந்தும் பொல்லாத மனிதர்களிடமிருந்தும், காப்பாற்ற விரும்பினார். ஆகவே அவர் சிலுவையில் ரத்தம் சிந்தினார். நாம் பாவம் செய்து. அக்கிரமம் செய்து நரகத்தீயில் விழுந்து விடக்கூடாது என்றுதான் என்னிடம் வா மகளே! என்று நம்மை அன்போடு அழைக்கிறார். சினிமாவும், டி.வி. சீரியலும், இன்னும் தகாத காரியங்களும், உலக சிற்றின்பங்களும் உங்களை மயக்கி வீழ்த்திவிடக்கூடாது என்றுதான் தந்தை இயேசு உங்களை பாசத்தோடு அவரிடம் அழைக்கிறார். நீங்களும், நானும், உலக மக்கள் யாவரும், உலகிலும் பின்பு யுக யுகமாகவும் பரலோகத்தில் இறைவன் இயேசுவோடு வாழ இயேசு கொடுத்த மிகப் பெரிய விலைக்கிரயம் அவருடைய உயிர். இந்த அன்புக்கு ஈடு இணையே இல்லை.

## இயேசுவின் அழைப்பு

அன்பு சகோதரியே, பெரிய சிக்கலில் சிக்கிக் கொண்டேன். குடும்பமாய் சிக்கிக் கொண்டோம் என்று வேதனைப்பட்டு கலங்குகிறீர்களா? இயேசு உங்களை அன்போடு அழைக்கிறார். சிலுவை மரத்தை சுமந்து தள்ளாடிய இயேசுவின் மேல் உங்கள் பாரத்தை உபவாசம் ஜெபம் செய்து இறக்கி வையுங்கள். அவர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் விடுவிப்பார். பறந்து காக்கிற பட்சிகளைப் போல சேனைகளின் கர்த்தர் (இயேசு) எருசலேமின் மேல் (உங்களுக்கு) ஆதரவாய் இருப்பார் ; அவர் கடந்து வந்து அதை விடுவிப்பார். (ஏசாயா 31:5)ம் வசனம் கூறுகிறது. இந்த இயேசு யார்? 1தீமோத்தேயு 3:16ம் வசனம் கூறுகிறது. தேவன் மாம்சத்தில் (மனித உருவில்) வெளிப்பட்டார். அதாவது உலகத்தையும் நம்மையும் படைத்த தேவன், இவ்வுலகில், இயேசு என்ற பெயரில் மனிதராய் பிறந்து வாழ்ந்தார். ஆம், இயேசு கிறிஸ்து நம் தேவன். அவர் உங்களை எந்த நிலையிலும் கைவிடமாட்டார். பைபிள் வாசித்து நீங்கள் குடும்பமாய் ஜெபியுங்கள், (குடும்ப ஜெபம்), நீங்கள் தனியாய் உபவாசத்தோடு ஜெபியுங்கள், (தனி ஜெபம்). வசனங்கள் மூலம் உங்கள் தேற்றுவார். நல்ல ஆலயத்துக்கு போய் ஞாயிற்றுகிழமை ஆராதனையில் கலந்து கொள்ளுங்கள். மனிதரால் வரும் போராட்டங்களையும் சாத்தானால் வரும் போராட்டங்களையும் அழிக்க பறந்து காக்கிற பட்சியை (பறவையை) போல எதிரியாகிய சாத்தானோடு யுத்தம் செய்வார். உங்களுக்கு மனமகிழ்ச்சியையும், உங்கள் உள்ளத்திலும் குடும்பத்திலும் சமாதானத்தையும் தருவார்.

visit our website
peaceofjesus.org (or) asv robin
Google

இதன் மூலம் இந்தியா மற்று உலக தேசமெங்கும் இயேசுவின் சமாதானம் ஊழியங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், இயேசுவின் சமாதானம் பத்திரிக்கையை (E-magazine) வாசிக்கவும், ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் கொடுத்த வீடியோ செய்திகளைப் பார்க்கவும் தேவன் இயேசு கிருபை செய்திருக்கிறார். நீங்கள் இதன்மூலம் இயேசுதரும் ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்ள அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

# வாலிபர் பகுதி

# பரிசுத்தம்



**அன்புத் தம்பி, தங்கையே, பரிசுத்த தேவன் இயேசுவின் பெயரால் உன்னை அன்புடன் வாழ்த்துகிறேன். தேவாதி தேவனுக்கே மகிமை!**

- பொற்செல்வி ராபின்

## சிலுவை அன்பு

உன்னதப்பாட்டு 5 :10 இறைவன் இயேசுவைக் குறித்து, அவர் வெண்மையும் சிவப்புமானவர், 2:1 வசனத்தில் சாரோனின் ரோஜா என்றும், 5:10 ம் வசனத்தில் பதினாயிரம் பேரில் சிறந்தவர் என்றும் கூறுகிறது. பேரழகு மிகுந்த இயேசுவை அநேக முறை தரிசித்திருக்கிறேன். அழகு மிகுந்த தேவன் இயேசு, சிலுவையில் அழகை இழந்தவராய், சரீரமெல்லாம் கொக்கிகள் மாட்டிய சவுக்கினால் கிழிக்கப்பட்டவராய் தொங்கினார். ஏசாயா 53:3ல் அவர் அசட்டை பண்ணப்பட்டவரும் (அவமானப்பட்டவரும்) மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும் துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாய் இருந்தார் என்று பார்க்கிறோம். இயேசு நம்மேல் வைத்த அன்பின் காரணமாக நம் அக்கிரமங்களையும் பாவங்களையும் சிலுவையில் ஏற்றுக்கொண்டு உயிரையே கொடுத்தார். இயேசுவின் அன்பும், மனதுருக்கமும் எவ்வளவு விசேஷித்தது!

## ராஜாதி ராஜா

உலகமனைத்திற்கும் பாவ மன்னிப்பு உண்டாக இயேசு தன் ரத்தம் முழுவதையும் சிலுவையில் சிந்தினார். அண்ட சராசரங்கள் அனைத்திற்கும் ராஜாவாய் மகிமையின் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் தேவன், மனித அவதாரம் எடுத்து இயேசு என்ற பெயரில் இவ்வுலகில் வாழ்ந்து, சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டாரே! பரலோகத்தில் தேவன் இயேசுவை சேராபீன்களும் கேரூபீன்களும், தேவ தூதர்களும், பரிசுத்தவான்களும் சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று ஓயாமல் வாழ்த்துகின்றனர். சூரியனையும், சந்திரனையும் எல்லா கிரகங்களையும், பூமியையும் இயக்குகிற தேவாதி தேவன் தான் இயேசு. இவர் இவ்வுலகில் வாழ்ந்து ஊழியம் செய்த போது, தொழு நோயாளியைப் பார்த்து எனக்கு சித்தமுண்டு சுத்தமாகு என கூறி அவனை குணமாக்கினார் (மத்தேயு 8:2,3). மனிதரின் பாவம் என்ற குஷ்டத்தையும் அவர் குணமாக்கி பரிசுத்தமாக்குவார். சுத்த பொன்னாக மாற்றுவார்.

## சுத்தமான கண்கள்

உன் கண் கெட்டதாய் இருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாய் (பாவம் நிறைந்ததாய்) இருக்கும். ஆகையால், உன்னிலுள்ள வெளிச்சம் இருள் ஆகாதபடிக்கு எச்சரிக்கையாய் இரு என்று லூக்கா 11 : 34,35ல் இறைவன் இயேசு கூறுகிறார். உன் கண்கள் வழியாக பாவம் நுழையும் . உன் உடலை பாவம் செய்ய வைக்கும். உனக்குள் இருக்கும் ஆத்துமா கறைபடும். ஆகவே உன் கண்களை பரிசுத்தமாய் காத்துக்கொள்.

## இதயத்தில் பரிசுத்தம்

இதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள் என்று மத்தேயு 5 :8ல் கர்த்தர் இயேசு கூறுகிறார். மனுஷருடைய இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காம விகாரங்களும், வன்கண்ணும் (பொறாமையும்) தூஷணமும் (அவதூறான வார்த்தைகள், கெட்ட வார்த்தைகள், பிறரை புண்படுத்தும் வார்த்தைகள்) பெருமையும், மதிகேடும், புறப்பட்டு வரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகள் மனுஷனை தீட்டுப்படுத்தும் என்று மாற்கு 7:21-23ல் தேவன் இயேசு கூறுகிறார். எனக்கு சித்தம் உண்டு, சுத்தமாகு என்று இரு கரம் நீட்டி அன்போடு உன்னை இயேசு அழைக்கிறார். இப்படிப்பட்ட பாவக் காரியங்கள் உன்னிடம் இருந்தால், அவரிடம் உன் ஜெபத்தில் சொல்லி, பாவ மன்னிப்பு கேட்டு பெற்றுக்கொள்.

இமயம் டி.வி.யில்
IMAYAM
இயேசுவின் சமாதானம்
பரவச நேரம்





ஒவ்வொரு 1வது 3வது செவ்வாய்கிழமைகளில்
காலை 7.15
ஜனவரி 03 17 செவ்வாய்





## உலக மக்களின் நல்வாழ்வை விரும்பும் இயேசுவின் சமாதானம் ஊழியங்கள்

## ஜெபித்துக்கொள்ளுங்கள்


### 18 வகை ஊழியங்கள்

- ✦ திக்கற்றோர், ஊனமுற்றோர், முதியோர் மத்தியில் ஊழியம்
- ✦ உள்தேச, வெளிதேச பிரசங்க ஊழியம்
- ✦ ஏழைகள் மத்தியில் சுவிசேஷம் மற்றும் உதவி
- ✦ ஆதிவாசிகள் மத்தியில் ஊழியம்
- ✦ மருத்துவமனை ஊழியம்
- ✦ தொலைக்காட்சி ஊழியம்
- ✦ உபவாச ஜெப ஊழியம்
- ✦ தொலைபேசி ஊழியம்
- ✦ மலைப்பகுதி ஊழியம்
- ✦ பத்திரிக்கை ஊழியம்
- ✦ கைப்பிரதி ஊழியம்
- ✦ புத்தக ஊழியம்
- ✦ கடித ஊழியம்
- ✦ பாடல் ஊழியம்
- ✦ மனநல காப்பக ஊழியம்
- ✦ மிஷனெரி ஊழியம்
- ✦ இலங்கை அகதிகள் மத்தியில் ஊழியம்
- ✦ விளம்பரம் மூலம் சுவிசேஷ ஊழியம்







தொடர் 107

ஆயத்தப்படுங்கள், ஆயத்தப்படுத்துங்கள்



# இயேசுவின் இரண்டாம் வருகை

– பொற்செல்வி ராபின்

## நினையாத நேரம்

நீங்கள் நினையாத நாளிகையிலே (நேரத்தில்) மனுஷகுமாரன் (இயேசு) வருவார் (மத்தேயு 24:44). இயேசு உலகத்தின் மத்திய ஆகாயத்தில், தம் தூதர்களோடும், பரலோகத்தில் உள்ள பரிசுத்தவான்களோடும் வருவார். உலகத்தின் நான்கு திசைகளிலிருந்தும் தம் பிள்ளைகளை, தம் தூதர்களைக் கொண்டு வானத்திற்கு இழுத்து பரலோகம் கொண்டு சேர்ப்பார். இந்த நேரத்தில் மனிதர்கள் மரணத்தை சந்திக்காமலேயே மறுரூபமாக்கப்பட்டு தேவன் இயேசுவை தரிசித்து மகிழுவார்கள். இந்த நாளும், நேரமும் பிதாவாகிய தேவனால் ரகசியமாய் வைக்கப்பட்டிருக்கிறது. தேவ ஊழியர்களும் இதை அறியமாட்டார்கள். ஆகவே இது இயேசுவின் ரகசிய வருகை என அழைக்கப்படுகிறது.

## இயேசுவே உயிர்த்தெழுதல்

யோவான் 11:25ல் நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாய் இருக்கிறேன். மட்டுமல்ல என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்றும் இறந்து அடக்கம்பண்ணப்பட்ட லாசருவின் சகோதரி மார்த்தாளிடம், இயேசு கூறினார். இப்படி கூறி, அவளுக்குள் விசுவாசத்தை ஏற்படுத்தி அடக்கம் பண்ணப்பட்டு 4 நாட்களான லாசருவை இயேசு உயிரோடு எழுப்பினார். இதன் மூலம் இயேசு தாம் தேவன் என்பதை அவ்வூர் மக்களுக்கும் இன்று வேதம் வாசிக்கும் உலக மக்களுக்கும் விளங்கச் செய்தார். தேவனுக்கே மகிமை!

## வானத்தில் பறக்கும் அனுபவம்

இது தான் மறுரூபமாகும் அனுபவம். மனிதர்கள் இறந்ததும் அவர்களுக்குள் இருக்கும் ஆத்துமா, நன்மை செய்திருந்தால் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருந்தால் பரலோகம் போகும். இயேசுவோடு நிரந்தரமாய் வாழும் மனிதர்கள் இப்படி மரணத்தை சந்திக்கிறார்கள். ஆனால் இயேசுவின் வருகையில் அப்படியில்லை. நல்லவர்களுக்கு மரணம் இலலை. அப்படியே பறக்கும் அனுபவம் உண்டாகிறது. எடையுள்ள உடல் மறுரூபமாக்கப்பட்டு தேவதூதரைப்போல் அதி வேகமாக பறக்கக் கூடியதாய், தேவனால் மாற்றப்படுகிறது. இந்த தேவனுடைய வல்லமையை நமக்கு வெளிப்படுத்தும் வசனம் இது. உயிரோடு இருந்து என்னை விசுவாசிக்கிறவன் எவனும் என்னென்றைக்கும் மரியாமலும் (மரணத்தை சந்திக்காமலும்) இருப்பான் (யோவான் 11:26). இதை இயேசு, லாசருவின் சகோதரி மார்த்தாளிடம் கூறுகிறார். இதுதான் இயேசுவின் ரகசிய வருகை வரை உயிரோடு வாழும் மக்களுக்கு ஏற்படும் பரவசமூட்டும் அனுபவம். ஆதலால் நீங்களும் ஆயத்தமாய் இருங்கள் (மத்தேயு 25:44).


-தொடரும்.

நீங்கள் நன்கொடை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கிகளில் செலுத்தி எங்களுக்கு தெரியபடுத்த அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| ICICI Bank | PEACE OF JESUS MINISTRY & TRUST<br>A.S.V. ROBIN | A/c No. 615201134411<br>A/c. No. 615201500867 |
| IDBI BANK | PEACE OF JESUS MINISTRY | A/c No. 006102000034441 |
| State Bank of India | A.S.V. ROBIN | A/c. No. 31682257041 |
| TMB | A.SOLOMON VICTOR ROBIN | A/c. No. 058100050303244 |
| Indian Overseas Bank | A.S.V. ROBIN | A/c. No. 010601000025999 |
| इंडियन बैंक Indian Bank | YESUVIN SAMADHANAM<br>A.S.V. ROBIN | A/c No. 725420502<br>A/c. No. 434465781 |






# வேத வினாப் போட்டி

(அனைவரும் கலந்து கொள்ளலாம்) நியாயாதிபதிகள் 1 - 10

"நான் உன்னோடு கூட நிச்சயமாய் வருவேன்"
- சொன்னவர் யார்?



திருமதி. ஆக்னஸ் ஐசக்

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 20.01.2017



## கமலா ஆரஞ்சு

இதில் வைட்டமின் ஏ உயிர்சத்து 99 மில்லி கிராம் வைட்டமின் பி-134 மி.கி. வைட்டமின் பி2-17 மி.கி, வைட்டமின் சி-19 மி.கி. சுண்ணாம்பு சத்து 14 மி.கி. உள்ளன.

உணவு சாப்பிட முடியாத நிலையில் நோய்படுக்கையில் உள்ளவர்களுக்கு ஆரஞ்சு பழச்சாறு கொடுத்தால் சோர்வு நீங்கும். 1 வயது மேற்பட்ட குழந்தைகளுக்கு பழச்சாறு அல்லது உரித்த சுளைகளை கொடுக்கலாம்.

அஜீரண கோளாறுகளை சரி செய்யும். அஜீரணம் காரணமாக ஏற்படும் வயிற்று போக்கை இந்த பழச்சாறு குணமாக்கும். இரவு தூக்கம் வராமல் தவிப்போர் 100 மில்லி பழச்சாறுடன் 2 தேக்கரண்டி தேன் கலந்து குடித்தால் நல்ல தூக்கம் பெறலாம்.

இதிலுள்ள வைட்டமின் சி பற்களை வலுப்படுத்தி, பற்கள் தொடர்பான குறைபாடுகளை அகற்றும்.




அன்பு சகோதரருக்கு, நான் நிம்மதி இழந்த நிலையில் காலையில் 7.15 மணிக்கு ஒளிபரப்பான பரவச நேரம் நிகழ்ச்சியை தற்செயலாக பார்த்தேன். அதில் நீங்கள் தேவ செய்தி கொடுத்துக் கொண்டிருந்தீர்கள். அதில் சிந்தனையில் பாவ எண்ணம் வந்தால் கூட அது பாவம் செய்ததற்கு சமம் என்ற வேத வசனத்தை (மத்தேயு 5:28) கூறினீர்கள். நான் பாவ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தேன். இந்த வார்த்தை என் உள்ளத்தை உடைத்தது. பின்பு நீங்கள் பரிசுத்த ஆவியில் நிறைந்து உள்ளம் உருகி ஜெபித்தீர்கள்.

அப்பொழுது திடீரென்று தேவ வல்லமை என்னைத் தொட்டது. என் பாவத்தை அறிக்கை செய்து அழுது இயேசுவிடம் என்னை ஒப்பு கொடுத்தேன். இறைவன் இயேசு என் பாவங்களை மன்னித்து, அந்த நொடிப் பொழுதே என் உள்ளத்தில் தேவ சமாதானத்தை கொடுத்தார். என் வாழ்வு மாறியது. தேவாதி தேவனுக்கே மகிமையும், ஸ்தோத்திரங்களும் செலுத்துகிறேன்.

*ஏ. தேவராஜன், சேலம்.*

Youtube : ASV ROBIN / PORCHELVI ROBIN

கடித தொடர்புக்கு :
இயேசுவின் சமாதானம்
393, பேஸ் 2,
ஹவுசிங் யூனிட், சிட்கோ,
கோயம்புத்தூர் – 641 021,
தென் இந்தியா




for communication :
PEACE OF JESUS
393. Phase 2,
Housing Unit, SIDCO,
Coimbatore - 641 021.
S.India

ஜெப உதவி / தொடர்புக்கு : (+91) 9994510610
Email: asvrobin@gmail.com www.peaceofjesus.org

Registered with Registrar of News Paper for India
RNI / TNTAM / 14783 / 2002

Postal Regsitration No. CB / 001 / 2015 - 2017
தனிப்பிரதி ரூ. 4/- ஆண்டு சந்தா - ரூ. 40/-



கோவையில்

# இயேசு அழைக்கிறார் விசேஷித்த கூட்டங்கள்

இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம், ஏர்டெல் அருகில், அவிநாசி ரோடு

## தேவசெய்தி : ஏ.எஸ்.வி. ராபின் - பொற்செல்வி ராபின்



**ஜனவரி 13**
வெள்ளி மாலை 6.30 மணி
வியாபாரிகள் ஆசீர்வாத கூட்டம்

**ஜனவரி 14**
சனி காலை 10.30 மணி உபவாச ஜெபம்
மாலை 6.30 மணி குடும்ப ஆசீர்வாத கூட்டம்

**ஜனவரி 15**
ஞாயிறு காலை 9.00 மணி ஞாயிறு ஆசீர்வாத கூட்டம்
மாலை 6.30 மணி அபிஷேக கூட்டம்

இயேசு தரும் ஆசீர்வாதம் பெற உங்களை அன்புடன் அழைக்கும் : இயேசு அழைக்கிறார் ஊழியங்கள்

**இயேசுவின் சமாதானம் சுவிஷேச ஊழியம்** இயேசுவை அறியாதவர்களுக்கு
**ஏ.எஸ்.வி. ராபின்** பத்திரிக்கை கொடுத்து, பண உதவி செய்த போது (நீலம்பூர்,கோவை).





## கடந்த மாதங்களில் ஏ.எஸ்.வி. ராபின் - பொற்செல்வி ராபின் தேவசெய்தி கொடுத்த கூட்டங்கள்






இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம் (டெல்லி)



(கோவை)

**இயேசுவின் சமாதானம் மருத்துவமனை ஊழியம்**
**பொற்செல்வி ராபின் ஜெபித்து, பணஉதவி செய்த போது** (அரசு மருத்துவமனை, கோவை)









Owned & Published By A.S.V. ROBIN Managing Trustee on behalf of Peace of Jesus Ministry & Trust 393, Phase - 2, Housing Unit, Sidco, Coimbatore - 641 021. and Printed at Vimal Offset Printing, Coimbatore - 641 012. India Editor : A.S.V. ROBIN